Regional Bulletin / Puducherry / Tamil /18.10 / 03.06.2025 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

தேதி : 03.06.2025 - செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, **அஸ்ஸாம் மற்றும் சிக்கிம் முதலமைச்சர்களை** தொடர்பு கொண்டு, மழை - வெள்ள நிலவரங்கள் குறித்து கேட்டு அறிந்தார்.

போலியோவைத் தொடர்ந்து, தொழுநோயை முற்றிலுமாக ஒழிக்கும் பாதையில் நாடு பயணித்து வருவதாக, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

புதுச்சேரியில் கொரோனா நிலவரங்களை எதிர்கொள்ள, எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளதால், மக்கள் அச்சப் படத் தேவையில்லை என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் **விக்சித் க்ருஷி சங்கல்ப் அபியான்** பிரச்சார இயக்கம், அரியூர், பங்கூர் உள்ளிட்ட கிராமங்களில் இன்று நடைபெற்றது.

வடகிழக்கு மாநிலங்களில் கனமழை மற்றும் வெள்ளத்தால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, அஸ்ஸாம் முதலமைச்சர் திரு. ஹிமந்த பிஸ்வா ஷர்மா, சிக்கிம் முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமங் ஆகியோரைத் தொடர்பு கொண்டு, வெள்ள நிலவரங்கள் குறித்து கேட்டு அறிந்தார். நிலவரங்கள் குறித்து பிரதமர் கவலை வெளியிட்டு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு பணிகளுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என உறுதி அளித்தார்.

இதற்கிடையே அஸ்ஸாமில் 21 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஆயிரத்து 250க்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், கடும் வெள்ளம் மற்றும் மண் சரிவில் சிக்கி 11 பேர் உயிரிழந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது. அருணாச்சலப் பிரதேசத்திலும், கனமழை தொடர்பான சம்பவங்களில், குறைந்தது 12 பேர் உயிரிழந்தனர்.

சிக்கிம் மாநிலத்தில் மண் சரிவு காரணமாக பல்வேறு இடங்களில் சிக்கி உள்ள சிவிலியன்களை, இந்திய விமானப்படை ஹெலிகாப்டர்களின் உதவியுடன் மீட்கும் பணிகளில், தேசிய பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். லாச்சுங் பகுதியில் சிக்கியிருந்த சுமார் 150

*மோடி வெள்ளம் - 2 (4)*

சுற்றுலாப் பயணிகள் பத்திரமாக மீட்கப் பட்டுள்ளதாகவும், மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பிராந்தியத்தில் கனமழை நீடிக்கும் என எதிர்பார்க்கப் படுவதால், தற்காலிக முகாம்கள் உட்பட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

*பாலம் – மோடி (9)*

ஜம்மு – காஷ்மீரின் உத்தம்பூர் – ஸ்ரீநகர்- பாரமுல்லா ரயில் பாதை திட்டத்தின் ஒரு பகுதியாக, உலகிலேயே மிக உயரமான இடத்தில் கட்டப் பட்டுள்ள, செனாப் ஆற்றுப் பாலத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 6ஆம் தேதி திறந்து வைக்கிறார். மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் இதை தெரிவித்துள்ளார். கடினமான இயற்கை சவால்களை தாக்குப் பிடிக்கும் வகையில், பொறியியல் வல்லுநர்களால் வடிவமைத்து கட்டப்பட்டுள்ள இந்த பாலம், புதிய இந்தியாவின் வலுவிற்கும், தொலைநோக்குப் பார்வைக்கும் சின்னமாகவே திகழ்வதாக அவர் கூறியுள்ளார்.

***அனைத்துக் கட்சி-1*** (5)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து, தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் வலுவான நிலைப்பாடுகளை, வெளிநாடுகளிடம் எடுத்துக் கூறுவதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிக் குழுக்கள், பணிகளை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பத் தொடங்கி உள்ளனர். இது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு …

**(வாய்ஸ்)**

***அனைத்துக் கட்சி-3*** **(6)**

**(வாய்ஸ்)**

தலைமையிலான குழுவினர், எகிப்திலும், சிவசேனா எம்.பி திரு. ஸ்ரீகாந்த ஷிண்டே தலைமையிலான குழுவினர், லைபீரியாவிலும், இந்தியாவின் நிலைப்பாடுகள் குறித்து இன்று, உயர்நிலைக் கூட்டங்களை நடத்தினர். காங்கிரஸ் எம்.பி. திரு. சசி தரூர் தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழுவினர், பிரேசிலில் உயர் நிலைக் கூட்டங்களை நடத்திய பின்னர், பயணத்தின் கடைசி கட்டமாக இன்று அமெரிக்காவிற்கு புறப்பட உள்ளனர்.

*சுகாதாரம் நட்டா (12)*

இந்தியாவில் இளம் பிள்ளை வாதம் ஏற்கனவே ஒழிக்கப்பட்டு, தொழுநோயை முற்றிலுமாக ஒழிக்கும் பாதையில் நாடு பயணித்து வருவதாக, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜெ.பி. நட்டா கூறியுள்ளார். இன்று கர்நாடக மாநிலம் பெலகாவியில் கே.எல்.இ உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், நாட்டில் காசநோய் ஆண்டுக்கு 18 சதவிகித அளவில் குறைந்து வருவதாகவும், உலக அளவில் இது சுமார் 8 சதவிகிதமாக மட்டுமே உள்ளதாகவும் கூறினார்.

நாடு முழுவதும் 1 லட்சத்து 77 ஆயிரம் இடங்களில் செயல்படும் ஆயுஷ்மான் ஆரோக்கிய மையங்களில், சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், வாய் புற்றுநோய் மற்றும் மார்பக புற்று நோயை கண்டுபிடிப்பதற்கான பரிசோதனைகள், பலகோடி பேருக்கு மேற்கொள்ளப்பட்டு, நோயாளிகளுக்கு, மேல் சிகிச்சை அளிக்கப் படுவதாக, அமைச்சர் மேலும் கூறினார்.

*புதுச்சேரி – கொரோனா (9)*

புதுச்சேரியில் கொரோனா பரவல் ஏற்பட்டால் நிலைமைகளை எதிர்கொள்ள, தனி வார்டுகள், போதிய மருந்துகள் உட்பட எல்லா

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளதால், பொதுமக்கள் கொரோனா குறித்து அச்சப்படத் தேவையில்லை என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். இன்று அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், கொரோனா குறித்து மத்திய அரசின் அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளும் புதுச்சேரியில் பின்பற்றப் படுவதாகக் கூறினார். முகக் கவசம் அணிய வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

***புதுச்சேரி விவசாயம் (19)***

புதுச்சேரியில், வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் விக்சித் க்ருஷி சங்கல்ப் அபியான் பிரச்சார இயக்கம், அரியூர், பங்கூர் ஆகிய கிராமங்களில் இன்று நடைபெற்றது. கால்நடை பராமரிப்புத் துறை வல்லுநர் டாக்டர் சித்ரா, மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு கழக விஞ்ஞானி டாக்டர் வித்யா ராஜேந்திரன் உள்ளிட்டோர், கால்நடை வளர்ப்பு, தீவன மேலாண்மை, மீன் வளர்ப்பு, மீன் கழிவு மேலாண்மை, மற்றும் மண் வள அட்டையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர். 10 பெண்கள் மற்றும் 162 ஆண் விவசாயிகள் இதில் பங்கேற்று பயன் பெற்றுள்ளதாக, புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எல். விஜயகுமார் தெரிவித்துள்ளார். பிரச்சார இயக்கத்தின் போது, வேளாண் கருவிகளின்

செயல்முறை விளக்கம், விதை விநியோகம், வினாடி – வினா, மற்றும் கலந்துரையாடல் அமர்வுகளும் இடம் பெற்றன. இதே போல அனந்தபுரம் கிராமத்தில் இன்று நடைபெற்ற பிரச்சார இயக்கத்தில், வேளாண் துறை இணை இயக்குநர் திரு. சிவசண்முகம் கலந்து கொண்டு, விவசாயிகளுக்கு விழிப்புணர்வு தகவல்களை வழங்கினார். காரைக்காலில், இன்று நெடுங்காடு கொம்யூனில் நடைபெற்ற வேளாண் வளர்ச்சி பிரச்சார இயக்கத்தில், சட்டமன்ற உறுப்பினர் திருமதி சந்திர பிரியங்கா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

***பரம்வீர் சக்ரா -1 (8)***

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்தியப் படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. இந்தியப் படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப் பிரிவு, சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில், 1947 – 48 ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரின் போது, நாட்டிற்காக உயிர்த் தியாகம் செய்து பரம்வீர் சக்ரா விருது பெற்ற, **கம்பெனி ஹவில்தார் மேஜர் பீரு சிங்** குறித்து ஒரு செய்தி தொகுப்பு....

**(வாய்ஸ்)**

***பரம்வீர் சக்ரா*** 2 (19)

(வாய்ஸ்)

1918ஆம் ஆண்டு ராஜஸ்தானில் பிறந்த **கம்பெனி ஹவில்தார் மேஜர் பீரு சிங்**, 1936இல் ராஜஸ்தான் ரைஃபிள்ஸ் படைப் பிரிவில் சேர்ந்தவர் ஆவார். 1948ஆம் ஆண்டு ஜம்மு – காஷ்மீரின் தித்வால் பிரிவில் நிகழ்ந்த கடும் சண்டையின் போது, வலுவான பாதுகாப்புடன் கூடிய எதிரிகளின் மலை முகடு ஒன்றை கைப்பற்றும் பொறுப்பு, பீரு சிங் தலைமையிலான படைக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டது. இவர்கள், குறுகிய மலைப்பாதை ஒன்றின் வழியாக எதிரிப் படைகளின் குண்டு மழைக்கு இடையே முன்னேறிச் சென்றபோது, கடும் இழப்புகளை சந்தித்தனர். படைப்பிரிவில் பலர் கொல்லப்பட்டு, இன்னும் பலர் காயடைந்த நிலையில், **கம்பெனி ஹவில்தார் மேஜர் பீரு சிங்**, தனியொரு ஆளாகவே எதிரிகளை நோக்கி முன்னேறிச் சென்றார். எதிரிகள் வீசிய கையெறி குண்டுகளில் இருந்து வெடித்துச் சிதறிய கூர்முனை உலோகத் துண்டுகளால், அவருக்கு பலத்த காயம் ஏற்பட்ட போதிலும், நடுத்தர இயந்திர துப்பாக்கிகளை கையாண்ட எதிரிப் படையினரை அவர் தமது ஸ்டென் துப்பாக்கியின் ஈட்டி முனையைக் கொண்டே தாக்கிப் போராடினார். உடலில் குருதி கொட்டக் கொட்ட, கண் பார்வை அநேகமாக பறிபோன நிலையிலும், அவர் தாக்குதலில் தொடர்ந்து ஈடுபட்டார். துப்பாக்கி ரவைகள் முழுமையாக

தீர்ந்த பிறகும், எதிரிகளின் பதுங்கு குழிகளுக்கு அவர் தாவித் தாவிச் சென்று துப்பாக்கி முனை ஈட்டி மூலமாகவே எதிரிகளைத் தாக்கினார்.

***பரம்வீர் சக்ரா*** 3 (8)

தொடர்ந்து எதிரிகளின் மற்றொரு நிலையை அவர் தாக்க முயன்ற போது, எதிரிப் படைகளின் குண்டு, அவரது நெற்றியில் பாய்ந்தது. அந்த கடைசி தருணத்திலும், அவர் போராட்டக் குணத்தை கைவிடாமல், எதிரிகளின் பதுங்கு குழி மீது, கையெறி குண்டு ஒன்றை வீசினார். இந்தியப் படையினரின் அபார மன உறுதிக்கு சிறந்த எடுத்துக் காட்டாகவே அமைந்த, தனித்துவமான இத்தகைய துணிகரச் செயலுக்காக, கம்பெனி ஹவில்தார் மேஜர் பீரு சிங்-கிற்கு, மரணத்திற்கு பிந்தைய முறையில், பரம்வீர் சக்ரா விருது வழங்கப் பட்டது.

***புதுச்சேரி கலைஞர் (7)***

தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி பிறந்தநாள், இன்று புதுச்சேரியில் அரசு சார்பில் கொண்டாடப் பட்டது. கடற்கரை சாலையில் உள்ள மேரி கட்டிட அரங்கில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவ படத்திற்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அமைச்சர்கள் திரு. லட்சுமி நாராயணன், திரு. சாய் சரவணன் குமார், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, எதிர்கட்சித் தலைவர்

திரு. R. சிவா, மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

***தமிழ் வளர்ச்சி (8)***

புதுச்சேரியில், கலை – பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் தமிழ் வளர்ச்சி சிறகத்தின் ஆண்டறிக்கையை முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவையில் உள்ள தமது அலுவலகத்தில், இன்று வெளியிட்டார். கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. திருமுருகன், தமிழ் வளர்ச்சி சிறகத்தின் சிறப்புப் பணி அதிகாரி முனைவர் வாசுகி ராஜாராம் ஆகியோர் உடனிருந்தனர். தமிழ் வளர்ச்சி சிறகம், மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகளையும், தமிழ் அறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பங்கேற்புடன் பல்வேறு கருத்தரங்குகளையும் நடத்தி வருவது குறிப்பிடத் தக்கது.

***ஐபிஎல் (4)***

ஐபிஎல் கிரிக்கெட்டில், அகமதாபாத் நரேந்திர மோடி விளையாட்டு அரங்கில், இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் இறுதிப் போட்டியில், பெங்களூர் – பஞ்சாப் அணிகள் மோத உள்ளன. இரு அணிகளும், முதல் முறையாக ஐபிஎல் கோப்பையை கைப்பற்றும் முனைப்புடன் களம் இறங்குவதும் குறிப்பிடத் தக்கது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, **அஸ்ஸாம் மற்றும் சிக்கிம் முதலமைச்சர்களை** தொடர்பு கொண்டு, மழை - வெள்ள நிலவரங்கள் குறித்து கேட்டு அறிந்தார்.

போலியோவைத் தொடர்ந்து, தொழுநோயை முற்றிலுமாக ஒழிக்கும் பாதையில் நாடு பயணித்து வருவதாக, மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

புதுச்சேரியில் கொரோனா நிலவரங்களை எதிர்கொள்ள, எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளதால், மக்கள் அச்சப் படத் தேவையில்லை என்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், வேளாண் வளர்ச்சிக்கான மத்திய அரசின் **விக்சித் க்ருஷி சங்கல்ப் அபியான்** பிரச்சார இயக்கம், அரியூர், பங்கூர் உள்ளிட்ட கிராமங்களில் இன்று நடைபெற்றது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / MS / RK**